# தகவல் ஏடு
# பணியமர்த்துனர்களுக்குக் கிடைக்கும் நிதியுதவி

வேலை சம்பந்தப்பட்ட மாற்றியமைப்புகள், உபகரணங்கள் மற்றும் சேவைகளைக் கொள்முதல் செய்வதில் உடலியலாமை உள்ளவர்கள் அல்லது அவர்களுடைய பணியமர்த்துனர்களுக்கு 'பணியிட ஒத்தாசை நிதி' (Employment Assistance Fund (EAF)) உதவுகிறது.

வேலையில் உள்ள, மற்றும் வேலை தேடுவதிலும் வேலைக்கு ஆயத்தம் செய்வதிலும் உதவி தேவைப்படும் உடலியலாமை உள்ளவர்களுக்கு உதவ இந்த சேவையானது அணுகப்படலாம்.

EAF- நிதியுதவியை எதற்கெல்லாம் பயன்படுத்தலாம் என்பதற்கான உதாரணங்களில் பின்வருவன அடங்கும்:

- பணியிடங்களில் செய்யப்படும் மாற்றியமைப்புகள் மற்றும் ஒத்தாசைத் தொழில்நுட்பங்கள், மின்னியல் மற்றும் தொடர்பாடல் கருவிகள் போன்ற உபகரணங்கள்;
- தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள்;
- 'ஆஸ்லன்' (அவுஸ்திரேலிய சைகை மொழி) மொழிபெயர்த்துரைப்பு;
- கணினி மென்பொருள் மற்றும் மென்பொருள் தர உயர்வுகள்;
- உடல்ரீதியாக வசதியாக இருக்கும் வகையில் பணியிடத்தில் செய்யப்படும் மாற்றியமைப்புகள்;
- மோட்டார் வாகனங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் மாற்றியமைப்புகள்;
- செவித்திறன் குறைவு குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி;
- உடலியலாமை குறித்த விழிப்புணர்வப் பயிற்சி; மற்றும்
- மன நலப் பிரச்சினைகள் அல்லது கற்றல் குறைபாடுகள் உள்ள பணியாட்களுக்கான வேலையோடு சம்பந்தப்பட்ட சிறப்பு ஆதரவு சேவைகள்.

**ஊதியத் தள்ளுபடிகள் (Wage subsidies)**

உடலியாமை உள்ளவர்களுக்கும், முதிர்ந்த வயதுடைய பணியாட்களுக்கும் தொடர்ந்து வேலை தருவதற்காகப் பணியமர்த்துனர்களுக்கு ஊக்க நிதி ஒன்றை ஊதியத் தள்ளுபடிகள் அளிக்கின்றன. பணியமர்த்துனர் என்ற முறையில், உடலியலாமை உள்ள ஒருவருக்கு வேலை தர உதவும் வகையில், 'உடலியலாமையுடையோர் பணியமர்த்தல் சேவைகள்' (Disability Employment Services (DES)), 'ஊதியத் தள்ளுபடித் திட்டம்' (Wage Subsidy Scheme) அல்லது 'முதிர்வயதுப் பணியாட்களுக்கான புத்தாரம்பம்' (Restart for Mature Workers) ஆகிய திட்டங்களின் ஊடாக நிதியுதவியை அணுகுவதற்கு நீங்கள் தகுதிபெறக் கூடும்.

EAF அல்லது ஊதியத் தள்ளுபடிகள் ஆகியவற்றைக் குறித்த மேலதிகத் தகவல்களுக்கு www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது 'ஜாப்-அக்ஸெஸ்' அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் அழையுங்கள் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

Australian Government

JobAccess is the national hub for workplace and employment information for people with disability, employers and service providers.

**1800 464 800** **www.jobaccess.gov.au**